தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம்
THE TAMIL NADU HOTELS ASSOCIATION
Regn. No. 46 / 1945 - 46

80 Years of serving people

President
M. Venkadasubbu B.Sc., B.L.
Darling Residency
11/8, Anna Salai, Vellore - 632 001
Phone : 0416 - 4202006 Cell : 98940 82901
Email : venkadasubbu@hotmail.com

Hony. Secretary
R. Srinivasan
Vasan Tiffan Home
198-B, Palace Road, Madurai - 625 001
Cell : 94430 63020
Email : jeyamvasan@gmail.com

Treasurer
P.G.R. Ganeshan
Hotel Rathna Bhavan
Opp. T. Nagar Bus Stand
Chennai - 600 017
Cell : 98409 94831

29, February, 2024

Dear Thiru Vanjimuthu,

Greetings and best Wishes.

As directed by our President Thiru Venkadasubbu, I am sending herewith a compilation containing 33 pages. It traces the history of our Tamilnadu Hotels Association from the year 1938. It also gives a fair view of various district associations.

We request that this may be uploaded in the website of our association.

Copies of Government orders and Notifications obtained by our association in favour of our industry right from year 1975 are under compilation. The second file will reach you next month.

Regards,
Sincerely Yours

(R.Srinivasan)
Encl : One file.
Copied to : Thiru M.Venkadasubbu

4th Floor, Montieth Mansion, 27, Montieth Road, Egmore, Chennai - 600 008. Ph : 044-28591500, Fax : 044 - 42147829
Cell : 90030 25116 E-mail : tnhassociation@yahoo.com Website : www.tamilnaduhotelsassociation.com

# தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம்

## THE TAMILNADU HOTELS ASSOCIATION

Regd No. 46/1945-46

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கம் | 1 |
| தலைமைச் சங்கம் அன்றும் – இன்றும் | 8 |
| விற்பனை வரி | 11 |
| உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் | 19 |
| தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் | 28 |
| சென்னை நகர காவல் சட்டம் | 31 |

# தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கம்

நம் தலைமைச் சங்கம் 1938-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. நம் சங்கத்தின் வரலாற்றினை முழுமையாக அறிந்துகொள்வதற்கு, நாம் காலச்சக்கரத்தில் சுமார் 85 ஆண்டுகள் பின்னோக்கிப் பயணிக்கவேண்டும். 1938-ம் ஆண்டில், நம் மாநிலம் தென்னிந்தியாவின் பெரும் பகுதியை உள்ளடக்கியதாக, மதராஸ் ராஜதானி (Madras Presidency) எனப் பெயர் பெற்றிருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த தேதியான 1947, ஆகஸ்ட் மாதம், 15-ம் தேதியன்று மதராஸ் மாகாணம் (Madras Province) எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1950-ம் ஆண்டில் மாநிலத்தின் பெயர் மீண்டும் மாற்றப்பட்டு Madras State என அழைக்கப்பட்டது. அன்று, நம் மாநிலத்தின் நிலப்பரப்பு இன்றைய தமிழ்நாடு (கன்னியாகுமரி மாவட்டம் தவிர்த்து), கரையோர ஆந்திரம், ராயலசீமா, மலபார், பெல்லாரி, தெற்கு கர்நாடகம் மற்றும் கொள்ளேகால் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. மொழிவாரியாக மாநிலங்கள் அமைக்கும் பணி 1953-ம் ஆண்டில் துவங்கியது. கரையோர ஆந்திரம் மற்றும் ராயலசீமா பகுதிகள் பிரிக்கப்பட்டு ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில், தெற்கு கர்நாடகா, பெல்லாரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஒரு தாலுகாவாக இருந்த கொள்ளேகாலம் ஆகியவை மைசூர் மாநிலத்துடன் இணைக்கப்பட்டு கர்நாடக மாநிலம் உருவானது. 1956-ம் ஆண்டில், மலபார் மாவட்டம் திருவாங்கூர் கொச்சின் ராஜ்ஜியத்துடன் இணைக்கப்பட்டு கேரள மாநிலம் உருவானது. நம் மாநிலத்தில் இணைந்திருந்த தேவிகுளம் பீர்மேடு தாலுகாக்கள் கேரள மாநிலத்துடன் இணைக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டம் கேரளத்திலிருந்து பிரிக்கப்பட்டு தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.

நமது மாநிலம், 1950-ம் ஆண்டிலிருந்து 1969-ம் ஆண்டு வரை மதராஸ் மாநிலம் (Madras State) எனப் பெயர் பெற்றிருந்தது. 1969-ம் ஆண்டில் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்டது. நமது தலைமைச் சங்கத்தின் பெயரும் தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கம்  (Tamil Nadu Hotels Association) என மாற்றப்பட்டது.

நமது மாநில உயர்நீதி மன்றம் இன்றும் High Court of Madras எனும் பெயரிலேயே தொடர்கிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

1938-ம் ஆண்டில் நம் தலைமைச் சங்கம் துவக்கப்பட்ட காலத்தில், இன்றைய கர்நாடகம், ஆந்திரா, தெலங்கானா மற்றும் கேரள மாநிலங்களைச் சார்ந்த ஒட்டல் சங்கங்கள் அனைத்தையும் வழி நடத்தும் பொறுப்பில் இருந்ததை மேற்கண்ட வரலாற்று நிகழ்வுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

நம் தலைமைச் சங்கம் துவக்கப்பட்ட பொழுது, அதாவது 1938-ம் ஆண்டில், இன்றைய தமிழ்நாட்டின் எல்லைக்கு உள்பட்ட மாவட்டங்கள் பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போம். மாவட்டங்களின் எண்ணிக்கை குறைவு.
13 மாவட்டங்கள். நிலப்பரப்பு அதிகம். திருநெல்வேலி மாவட்டம் இன்றைய திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களை உள்ளடக்கியது. மாவட்ட சங்கம் சந்திர விலாஸ் ஒட்டலில் இயங்கியது. இன்றைய மதுரை, தேனி திண்டுக்கல் மாவட்டங்களை உள்ளடக்கியது அன்றைய மதுரை மாவட்டம்.

மதுரை மாவட்ட சங்கம் 1939-ம் ஆண்டு துவங்கப்பட்டது. அன்று, அதன் பெயர் “மதுரை சிற்றுண்டி போஜன சாலைக்காரர்கள் சங்கம்.” இன்றைய திருச்சி, கரூர்,பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களைக் கொண்டது அன்றைய திருச்சிராப்பள்ளி ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம். 1944-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டது. புதுக்கோட்டை ராஜதானி 1948-ம் ஆண்டில் திருச்சிரப்பள்ளி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. புதுக்கோட்டை தனி மாவட்டமாக 14-1-1974 தேதியில் உருவாக்கப்பட்டது.

இன்றைய சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய அன்றைய சேலம் மாவட்ட ஹோட்டல் சொந்தக்காரர்கள் சங்கம் 1943-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. இன்றைய தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களை உள்ளடக்கிய தஞ்சாவூர் மாவட்ட சங்கம் 1942-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டது. இன்றைய வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களை உள்ளடக்கிய அன்றைய வட ஆற்காடு மாவட்ட சங்கம் வேலூரிலிருந்து செயல்பட்டது. இன்றைய ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்துர் மாவட்டங்களை உள்ளடக்கிய கோயம்புத்தூர் மாவட்ட சங்கம் 1944-ம் ஆண்டு முதல் செயல்பட்டது.

மெட்ராஸ் ஹோட்டல்கள் சங்கம் 1939-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் திண்டிவனம் என் இரண்டு சிறு ஊர்களிலும் தனியாக ஒட்டல்கள் சங்கங்கள் செயல்பட்டன. தென் ஆற்காடு மாவட்ட சங்கம் (இன்றைய கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் இணைந்தது) கடலூரிலிருந்து செயல்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் கண்டிப்பாக ஒட்டல் சங்கங்கள் பெரும் பொறுப்புடன் சிறப்பாகச் செயல்பட்டிருக்கவேண்டும். அது காலத்தின் கட்டாயம். ஏனெனில், இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்ற காலம். நம் தாய்நாடு பிரிட்டீஷ் காலனி ஆதிக்க நாடாக இருந்தது. அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் யுத்த களங்களுக்கு (war efforts) திருப்பி விடப்பட்டிருந்தன. அரிசி, கோதுமை, மைதா, ரவை, சர்க்கரை, விறகு, மண்ணெண்ணெய் போன்ற அனைத்துப் பொருட்களுக்கும் கடுமையான பற்றாக்குறை நிலை. சட்ட பூர்வமான உணவுப் பங்கீட்டு முறை (Ration System) அமுலில் இருந்தது. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 8 அவுன்ஸ் அரிசி எனும் கணக்கில் ரேஷன் கார்டுகள் அளிக்கப்பட்டிருந்தன. வாரத்தில் ஒரு நாள் (வியாழக்கிழமை) உணவகங்களில் அரிசியில் தயாரிக்கப்பட்ட உணவு வழங்கக்கூடாது எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. வாரத்தில் ஏதாவது ஒரு நாளில் மக்கள் ஒருவேளை உபவாசம் இருக்கலாமே எனவும் அறிவுறுத்தப்பட்டது. திருமணம் போன்ற நிகழ்வுகளில் விருந்தினர் எண்ணிக்கை ஐம்பதுக்குள் (50) இருக்கவேண்டும் என வரையறுக்கப்பட்டிருந்தது. சிவில் சப்ளை அதிகாரிகளின் துன்புறுத்தல் நடவடிக்கைகளுக்குப் பயந்து, திருமண அழைப்பிதழ்களில் "தங்கள் ரேஷன் கார்டுகளை ஒரு வாரம் முன்பே அனுப்பிவைக்கவும்" என வேண்டுகோள் அச்சிடப்பட்ட பழக்கமும் இருந்தது. அனைத்துப் பொருட்களுக்கும் கள்ளச் சந்தைப் பேரமும் நடந்தது. Black Market என்ற பெயரும் அந்தக் காலத்தில் தான் உருவானது.

1947-ம் ஆண்டில் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு, நாடு முழுவதும், பெரும்பாலான மாவட்டங்களில் லண்டனில் I.C.S.பட்டம் (Indian Civil Service) பெற்ற பிரிட்டிஷ்காரர்கள் தான் கலெக்டர்களாகப் பணியாற்றினர். மாவட்ட குற்றவியல் நீதிமன்ற நீதிபதியாகவும் செயல்பட்டனர். நீதி வழங்குதல் உள்ளிட்ட குறுநில மன்னர்களுக்கு இணையான அனைத்து அதிகாரங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்தியாவசியப் பொருட்கள் அனைத்திற்கும், சென்னை உள்பட அனைத்து மாவட்ட சங்கங்களும் மாவட்டக் கலெக்டர்களுக்கு மனு அளித்து, Quota முறையில் பெற்று, உறுப்பினர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தன. தமிழ்நாட்டில் மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருளான அரிசிக்குக் கடும் பற்றாக்குறை. மாவட்ட சங்கங்கள் சிறப்புப் பெர்மிட் பெற்று டெல்டா மாவட்டங்களிலிருந்தும் ஆந்திர மாநிலத்திலிருந்தும் அரிசி வரவழைத்து உறுப்பினர்களுக்கு சப்ளை செய்தன. சேலம் மாவட்ட சங்கம் சொந்தமாக லாரி வைத்திருந்தது. கேரளாவிலிருந்து வரவழைத்தும், Coupe Contract எடுத்தும், உறுப்பினர்களுக்கு விறகு சப்ளை செய்தது. ஆண்டு விழா போன்ற வைபவங்களில் மட்டுமே, மாவட்ட சங்கங்களுக்கும், தலைமைச் சங்கத்திற்குமிடையே பரஸ்பரத் தொடர்புகள் இருந்ததை அறிய முடிகின்றது.தலைமைச் சங்கத்தின் நிர்வாகம் சென்னை நகரத்தை மையப்படுத்தியே இருந்தது.

1965-ம் ஆண்டில், இந்திய அரசு "பசுமைப் புரட்சி" எனும் ஒர் அருமையான இயக்கத்தைத் தோற்றுவித்தது. அவ்வியக்கத்திற்கான செயல் திட்டங்கள் அனைத்தையும் தமிழ் நாட்டைச் சேர்ந்த வேளாண் அறிவியல் நிபுணர் திருM.S.சுவாமிநாதன் உருவாக்கி அளித்தார். அத்திட்டம் 1967-ம் ஆண்டில் செயல்படத் துவங்கி 1978ல் நிறைவுற்றது. "பசுமைப் புரட்சி" மாபெரும்

சாதனை நிகழ்த்தியது. உணவு பற்றாக்குறைப் பொருளாதாரம் எனும் நிலையிலிருந்து உலகத்தின் சிறந்த விவசாய நாடுகளில் ஒன்று எனும் நிலைக்கு நம் தாய் நாடு உயர்வடைந்தது. வேளாண் விளை பொருட்கள் உள்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் சந்தைப் பொருளாதராத்தில் தாராளமாகக் கிடைத்தன. பெர்மிட், கோட்டா ராஜ்ஜியம் முடிவுக்கு வந்தது. மாவட்ட சங்கங்களின் பணிச் சுமை குறைந்தது. தலைமைச் சங்கம் மற்றும் மாவட்ட சங்கங்களின்பால் உறுப்பினர்களுக்கு இருந்த ஆர்வத்திலும், தொடர்பிலும் தொய்வு உறுவானது.

மாற்றங்கள் தொடர்கதை, மாற்றங்களுக்கு மாற்றம் கிடையாது என்பதை நாம் அறிவோம். 1975-ம் ஆண்டு ஜுன் மாதம் 25-ம் தேதி நள்ளிரவில், நாட்டில் அவசர நிலை (State of Emergency) பிரகடனப் படுத்தப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. அரசியல் தலைவர்கள் பலர் சிறைப்படுத்தப்பட்டனர். ஊடகங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன.

அவசர நிலை அரசியல் சார் நடவடிக்கை. ஆனால் அவசர நிலைமையினால் மக்களுக்கு நன்மை எனும் ஒர் போலியான தோற்றத்தை உருவாக்க, உணவகங்கள் பலிகடாவாக ஆக்கப்பட்டன. உணவகங்களில் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகள் 80 சதவீதம் குறைக்கப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டது. இரண்டு இட்லி சட்னி சாம்பாருடன் ரூ 0-20 (1-00), தோசை ரூ 0-25 (1-25, 1-50) பொங்கல் ரூ 0-30 (1-00, 1-50) காஃபி 120ML ரூ 0-25 (1-00, 1-25) சாப்பாடு ரூ 1-00 (5-00).

எடை அளவுகளில் 3gm 4gm குறைந்தால் கூட உணவகங்கள் நான்கைந்து நாட்களுக்கு மூடி சீல் வைக்கப்பட்டன. சிவில் சப்ளை அதிகாரிகள் தராசு, அளவு மானிகளுடன் அச்சுறுத்தல் நோக்கத்துடன் உணவகங்களில் தொடர்ந்து சோதனைகள் நடத்தினர். நிலைமையின் கடுமை மாவட்ட சங்க நிர்வாகிகளைத் தலைமைச் சங்கம் நோக்கிச் செலுத்தியது. அந்தக் காலகட்டத்தில் தான், கோவையிலிருந்து திரு தாமோதரசாமி நாயுடு, மதுரையிலிருந்து திரு ஸ்ரீனிவாசன், திரு காளிமுத்து, திருச்சியிலிருந்து திரு ஸ்ரீராமுலு செட்டியார், திரு சங்கர ரெட்டியார் போன்றவர்கள் சென்னையில் முகாமிட்டனர். மாநில அமைச்சரவை கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலானது. அரசு அதிகாரிகளைப் பலமுறை சந்தித்தோம். மாநில ஆளுநரையும் சந்தித்து, கோரிக்கை மனு அளித்தோம். பலன் ஏதும் இல்லை.

1977-ம் ஆண்டில் அவசர நிலை ரத்து செய்யப்பட்டது. சட்ட மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தலில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் வெற்றி பெற்று, பெருமதிப்பிற்குரிய திரு M.G.R. மாநில முதல்வராகப் பதவி ஏற்றார். நம் சங்கத்தின் சார்பில் ஒர் குழுவாகச் சென்று முதல்வரைச் சந்தித்தோம். தர்ம நியாயத்திற்கு முற்றிலும் பொருந்தாத விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் பற்றி அவரிடம் விளக்கமாகக் கூறினோம். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், பல்வேறு தரப்பட்ட மக்களின் ரசனைக்கும், வசதிக்கும் ஏற்ப உணவுப் பண்டங்களின் விலைகள் இருப்பதை அவரிடம் விரிவாக எடுத்துரைத்தோம். விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் உடனடியாக ரத்து செய்யப்பட்டது. *(நன்றி: கோவை R.H.R. திரு சுந்தரவேல் : M.G.R.சந்திப்புக்கு வாய்ப்புப் பெற்றுத் தந்தார்)*

நாம் ஏற்கனவே பதிவு செய்துள்ளோம்.

1938-ம் ஆண்டில் நம் தலைமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில், நம் மதராஸ் ராஜதானி – ஆங்கிலத்தில் Madras Presidency – தென்னிந்தியாவின் பெரும் நிலப்பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட சங்கங்கள் செய்ல்பட்டன. மாநில சங்கத்தின் செயல்பாட்டின் தாக்கம் மாவட்ட அளவில் குறைவாகவே உணரப்பட்டது. மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின்னரும், 1969-ம் ஆண்டில் நம் மாநிலம் தமிழ்நாடு எனப் பெயர் பெற்ற பின்னரும் இதே நிலை நீடித்தது.

1975-ம் ஆண்டில் அவசர நிலைப் பிரகடனம் (State of Emergency), தொடர்ந்து, எவ்விதமான பொருளாதார, தார்மீக விதிகளுக்கும் உட்படாத, ஒட்டல் உணவு வகைகளின் மீதான விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம். அதனை அமுல்படுத்தும் நோக்கில், உணவக உரிமையாளர்கள் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டது ஆகியவை மாற்றங்களைக் கொண்டு வந்தது. மாவட்ட சங்கங்களின் நிர்வாகிகள் மாநில சங்கத்தை அனுகினர். பல ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. "எமெர்ஜன்சி" காலக் கொடுமைகளிலிருந்து தொழிலைக் காப்பாற்ற வேண்டிய இக்கட்டான சூழல். தலைமைச் சங்க நிர்வாகத்தில் மாற்றங்கள் கொண்டு வருவதெனத் தீர்மானிக்கப்பட்டது. 1977-ம் ஆண்டில் திரு M.P.புருஷோத்தமன் மாநில சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சங்கத்தின் முயற்சிகளின் பலனாக, ஒட்டல் உணவின் மீது விதிக்கப்பட்டிருந்த விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் ரத்து செய்யப்பட்டது. சாதாரண உணவகங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரி ரத்து செய்யப்பட்டது. இந்த வரி விலக்கு 14 ஆண்டு காலம் நீடித்தது. அகில இந்திய அளவில், நம் மாநிலத்தில் மட்டும்தான் உணவகங்களுக்கு வரி விலக்கு சலுகை வழங்கப்பட்டது என்பது நம் சங்கத்தின் முயற்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றி. இத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தலைமைச் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, திரு R.ஸ்ரீனிவாசன், மாநிலம் முழுவதும் அனைத்து ஊர்களுக்கும் சென்று, மாவட்ட சங்கங்களின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டார். பல மாவட்டங்களில் சங்கங்கள் சிறப்பாகச் செயல்படத் துவங்கின.

ஆயினும், மாவட்டங்களில் ஓர் பெரும் மனக்குறை நிலவியது. தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கத்தின் சட்ட விதிகளின்படி, சென்னை ஒட்டல்கள் சங்கத்தின் பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் அந்த சங்கத்தின் நிர்வாகிகள்தான் தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கத்திலும் நிர்வாகிகளாகப் பதவி வகிக்க இயலும். தலைமைச் சங்கத்தின் நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் உரிமை அந்த சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படவில்லை. இது ஒரு விசித்திரமான விதி மட்டுமல்ல. சட்ட சம்மதம் இல்லாததும் கூட. மாற்றங்கள் தேவை என மாவட்ட சங்க நிர்வாகிகள் பலரும் கருதினர்.

1992-ம் ஆண்டில் திரு A.ராமதாஸ் ராவ் மாநில சங்கத்தின் தலைவரகப் பொறுப்பேற்றார். தலைமைச் சங்கத்தின் செயல்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவரும் நோக்கத்தில், ராஜபாளையத்தில், 23-8-1996 தேதியன்று கருத்தரங்குகள் நடைபெற்றன. தலைமைச் சங்கத்தின் நிர்வாகம், நிர்வாக விதிகள், செயல் திட்டம், உறுப்பினர் பெருக்கம் போன்ற பல விஷயங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டன. தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களை சங்கத்தின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் நிலையும் உருவாக்கப்பட்டது.

மேற்கண்ட மாற்றங்கள் தலைமைச் சங்கம் மட்டுமின்றி மாவட்ட சங்கங்களிலும் பெரும் வளர்ச்சியை உருவாக்கின. மாநிலம் முழுவதிலும், உணவகங்கள், பேக்கரிகள் மற்றும் இனிப்பகங்களின் உரிமையாளர்களிடையே பெரும் நட்புணர்வை உருவாக்கியது. **“உணவுக் குடும்பம்” எனும் மகத்தான தோழமை இயக்கத்தைத் தோற்றுவித்தது.**

# தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கம்

## தலைவர்

| | |
|---|---|
| திரு V.ஜயராமன் | 1965 – 1977 |
| திரு M.P.புருஷோத்தமன் | 1977 - 1992 |
| திரு A.ராமதாஸ் ராவ் | 1992 – 2004 |
| திரு K.தாமோதரசாமி நாயுடு | 2004 – 2006 |
| திரு M.ரவி | 2006 – 2010 |
| திரு M.வெங்கடசுப்பு | 2010 - |

## கௌரவத் தலைவர்கள்

| | |
|---|---|
| திரு A.ராமதாஸ் ராவ் | திரு M.ரவி |
| திரு D.ஶ்ரீனிவாசன் | திரு K.T.ஶ்ரீனிவாச ராஜா |

## செயலாளர்

| | |
|---|---|
| திரு R.ஶ்ரீனிவாசன் | 1975 – |

## பொருளாளர்

| | |
|---|---|
| திரு P.K.ஶ்ரீனிவாச ஹெர்லே | 1990 – 2002 |
| திரு P.G.R.கணேசன் | 2002 - |

## விற்பனை வரி

ஒட்டல் உணவுப் பண்டங்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரி, மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி மற்றும் பொருள்கள் மற்றும் சேவை வரி போன்றவைகளால் தமிழகத்தில் உணவகத் தொழில் உரிமையாளர்கள் பாதிக்கப்படாமல் காப்பாற்றப் படுவதற்கு, நம் சங்கம் தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ளது.

1978-ம் ஆண்டு முதல் 14 ஆண்டு காலம் விற்பனை வரியிலிருந்து முழு விலக்குப் பெற்றுள்ளோம். *(நன்றி : திரு M.P.புருஷோத்தமன், திரு P.M.பாலகிருஷ்ண ராவ், திரு லட்சுமண ரெட்டியார், திரு R.ஸ்ரீனிவாசன், திரு A.ராமதாஸ் ராவ், திரு M.கிருஷ்ணன்)*

## VAT மதிப்புக் கூட்டு வரி

தமிழ்நாட்டில், பொது விற்பணை வரிச் சட்டத்திற்கு மாற்றாக, மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 1-1-2007 தேதியன்று அமுல் படுத்தப்பட்டது.

சட்டத்தின் முன் வரைவு வெளியிடப்பட்டவுடன், அச்சட்டத்தில் உணவகத் தொழிலைப் பாதிக்கும் விதிகள் குறித்து கோரிக்கை மனுக்கள் அளித்து, பல சலுகைகள் பெற்றோம். நன்றி: மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்.

1. சாதாரன உணவகங்கள் மீது 4 சதவீத வரி விதிக்கப்பட்டது. வரியைக் குறைக்கவேண்டும் என்ற நம் கோரிக்கை ஏற்கப்பட்டது. வரி அமுலான 1-1-2007 தேதியன்றே வரி 2 சத வீதமாகக் குறைக்கப்பட்டது.

2. சட்டத்தில் பல அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், அப்பொருட்களைக் கொள்முதல் செய்து வணிக ரீதியில் பயன்படுத்தினால், Sec 12ன் படி அவைகளுக்குக் கொள்முதல் வரி (Purchase Tax) செலுத்தவேண்டும். கொள்முதல் நிலையில் வரி செலுத்த சட்டத்தில் வாய்ப்பு இல்லாத நிலையில் கொள்முதல் வரி விதிப்பிலிருந்து உணவகங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என மனு அளித்தோம். நம் கோரிக்கை ஏற்கப்பட்டது. உணவகங்களுக்கு கொள்முதல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

குறிப்பு: உணவகங்கள் மட்டுமின்றி, இவ்வாறு வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களைக் கொள்முதல் செய்து வணிக ரீதியில் பயன்படுத்தும் தொழில்கள் ஏராளமாக உள்ளன. அத்தகைய தொழில்கள் சார்ந்த சங்கங்கள் இந்த விசித்திரமான கொள்முதல் வரி விதிப்பைக் கவனிக்கத் தவறிவிட்டன. அதன் விளைவாக, இரு ஆண்டுகளுக்குப் பின்னர், நிவாரணம் தேடி, உயர் நீதி மன்றத்தில் 60க்கும் மேலான ரிட் மனுக்கள் தாக்கலாகி உள்ளன என மாநில வணிக வரி ஆணையாளர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் நம்மிடம் கூறினார்.

3. வணிக முத்திரையிடப்பட்ட உணவுப் பண்டங்கள், ஐஸ் கிரீம், பாட்டில்களில் அடைக்கப்பட்ட பானங்கள், குடி தண்ணீர் ஆகியவைகளை உணவகங்கள் கொள்முதல் செய்து விற்பனை செய்தால், அவைகளுக்கு இரட்டை வரி செலுத்த வேண்டியிருந்தது. அதனை ரத்து செய்யவேண்டும் எனக் கோரினோம். கோரிக்கை ஏற்கப்பட்டது. 2 சதவீதம் வரி செலுத்தினால் போதும் என சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருள்கள் மீதான கொள்முதல் வரி மற்றும் வணிக முத்திரையிடப்பட்ட உணவுப் பண்டங்கள் மீது இரட்டை வரி விதிப்பு ஆகியவை சட்ட ரீதியிலான தவறு என நம் கோரிக்கை மனுவில் கூறியிருந்தோம். 2008-2009 நிதி நிலை அறிக்கையிலும் இவ்வரி விதிப்பு சட்ட ரீதியிலான தவறு (anomaly) எனக் கூறப்பட்டுள்ளது.

4. சமையல் எரி வாயு : கொள்முதல் நிலையில் நட்சத்திர அந்தஸ்து உள்ள உணவகங்களுக்கு மட்டும் வரிச்சலுகை அளிக்கப்பட்டிருந்தது. சாதாரண உணவகங்களுக்கும் அச்சலுகை அளிக்கப்படவேண்டும் எனக் கோரினோம். கோரிக்கை ஏற்கப்பட்டது.

*(நன்றி : TNHA M.ரவி, தலைவர் R.ஸ்ரீனிவாசன், செயலாளர்)*

<u>மத்திய அரசின் சேவை வரி</u>

1994-ம் ஆண்டுக்கு முன்பாக நம் நாட்டில் சேவைகளின் மீது வரி விதிக்கப்படவில்லை. 1994-ம் ஆண்டில், இந்திய அரசின் நிதிச் சட்டத்தில் (Finance Act) திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு, சேவைகளின் மீது வரி விதிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டது. வெளி இடங்களில் உணவு வழங்கும் சேவை (Outdoor Catering) மற்றும் A.C.வசதியுள்ள உணவகங்களில் வழங்கப்படும் உணவு மற்றும் பானங்கள் ஆகியவை சேவை வரி வரம்பில் கொண்டுவரப்பட்டன. தங்கும் விடுதிகளில் (Lodges) தினசரி

வாடகை ரூ 1000-க்குமேல் கட்டணம் வசூலிக்கும் அறைகள் மீது சேவை வரி விதிக்கப்பட்டது. உணவு வழங்கும் சேவையைப் பொறுத்தமட்டில் நம் சங்கத்தின் கோரிக்கை மனு மத்திய அரசினால் ஏற்கப்பட்டது. உணவுக்கான கட்டணம் 40 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டு, எஞ்சிய 60 சதவீதக் கட்டணத்தின் மீது சேவை வரி விதிக்கப்பட்டது. (நன்றி: R.ஸ்ரீனிவாசன், செயலாளர்)

ஆனால், இந்திய அரசியலமைப்புச் சட்டம் அளித்த அதிகாரத்தின் விளைவாக, மாநில அரசின் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ், மொத்தக் கட்டணத்திற்கும் வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. இந்த இரட்டை வரி விதிப்பு முறை 1994-ல் துவங்கி 2017-ம் ஆண்டில் சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்டம் (GST Act) அமுலாகும் வரை நீடித்தது.

## G.S.T. சரக்குகள் மற்றும் சேவை வரி

பொருட்கள் விற்பனை மீதான விற்பனை வரி மற்றும் சேவைகள் மீதான சேவை வரி இரண்டையும் ஒருங்கிணைத்து Goods and Service Tax Act 2017-ம் ஆண்டில் நமது நாட்டில் அறிமுகமானது. ஒரு நாடு ஒரே வரி விதிப்பு முறை. நாடு முழுவதும் சேவைகள் மற்றும் விற்பனை ஆகியவைகளுக்கு மாநிலங்கள் அனைத்திலும் ஒரே விகிதத்தில் வரி எனும் வரிச் சீர்திருத்தம் 2017-ம் ஆண்டில் அமுல் படுத்தப்பட்டது. மத்திய நிதி அமைச்சரின் தலைமையில், அனைத்து மாநிலங்களின் சார்பான பிரதிநிதிகளையும் கொண்ட G.S.T. Council வரி விதிப்பு விகிதங்கள் உள்ளிட்ட அனைத்து நடைமுறை விதிகளையும் தீர்மானிக்கும் அதிகாரம் கொண்டுள்ளது.

G.S.T சட்டம் 1-7-2017 தேதி அமுல் படுத்தப்பட்ட பொழுது, நாம் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானோம். பெரும்பாலான சாதாரண உணவகங்கள் மீது 18 சத வீதம் வரி விதிக்கப்பட்டது. நம் மாநிலத்தில் நாம் இரண்டு சத வீதம் தான் VAT வரி செலுத்திக்கொண்டிருந்தோம். நம் வாடிக்கையாளர்கள் நடுத்தர மற்றும் அடித்தட்டு நிலையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அன்றாடம் பசியாற உண்ணும் உணவின் மீது 18 சத வீதம் வரி எவ்வாறு வசூலிக்க இயலும்? அடித்தட்டு மக்கள் தெருவோரக் கடைகளை நாடிச் சென்று விடுவார்கள். நம் வியாபராம் பாதிப்படையும். ஆனால், கர்நாடகம், ஆந்திரா, தெலங்கானா மற்றும் வட மாநிலங்கள் அனைத்தும் ஏற்கனவே 12 சதவீதம் முதல் 15 சதவீதம் வரை வரி விதிப்பில் இருந்தன. ஆதலால், புதிய வரி விகிதம் குறித்து அந்த மாநில சங்கங்கள் எவ்விதமான எதிர்ப்பு உணர்வையும் வெளிப்படுத்தவில்லை.

நாம் தனித்து நின்று போராடவேண்டிய சூழல் உருவானது. 1978-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மக்கள் அன்றாடம் பசியாற உண்ணும் உணவின்மீது விற்பனை வரி விதிப்பை எதிர்த்துப் போராடி வந்த நம் சங்கத்தின் நீண்ட கால அனுபவம் கைகொடுத்தது. விரிவான மனு தயாரித்தோம். நம் மாநில GST கவுன்சில் உறுப்பினர், வணிக வரித்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து, பிரச்னையின் தீவிரத்தை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்றோம். G.S.T.கவுன்சில் கூட்டத்தில் இந்தப் பிரச்னையைக் கொண்டு சென்று,

வாதிடுமாறு கேட்டுக்கொண்டோம். மத்திய நிதி அமைச்சர் திரு அருண் ஜேட்லி அவர்களை ஐந்து தடவைகள் சந்தித்தோம். மத்திய நிதித் துறை மற்றும் வருவாய்த் துறை செயலாளர்கள், TRU Director என அதிகாரிகள் பலரையும் சந்தித்து நம் கோரிக்கையை வலியுறுத்தினோம். ஆனால், கவுன்சில் கூட்டத்தில் பெரும்பான்மை ஆதரவு திரட்டவேண்டுமே! கேரளா, புதுச்சேரி, கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா, ஜம்மு காஷ்மீர், பீகார், மகாராஷ்ட்ரா, மேற்கு வங்கம், டெல்லி, அஸ்ஸாம், சத்தீஷ்கர் உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்களின் கவுன்சில் உறுப்பினராக இருந்த அமைச்சர்களைச் சந்தித்து, நம் கோரிக்கையை விளக்கிக் கூறி அவர்களுடைய ஆதரவுகளைத் திரட்டினோம். நம் கோரிக்கை வெற்றி பெற்றது. உணவகங்களின் மீதான வரி 5 சத வீதமாகக் குறைக்கப்பட்டு, 14-11-2017 தேதியன்று மத்திய நிதி அமைச்சகம் ஆணை வெளியிட்டது. நம்முடைய தீவிர முயற்சிகளின் பலனாக, அகில இந்திய அளவில் அனைத்து உணவகங்கள், 3/4 நட்சத்திர அந்தஸ்து உள்ள ஒட்டல்கள் உள்பட அனைத்தும் 5 சதவீத வரி விதிப்பின் கீழ் வந்தன. அகில இந்திய அளவில் நம் சங்கத்தின் சாதனைக்குப் பாராட்டுக்கள் கிடைத்தன.

*(நன்றி: M.வெங்கடசுப்பு, தலைவர், M.ரவி, D.ஸ்ரீனிவாசன் மற்றும் K.T.ஸ்ரீனிவாச ராஜா, கௌரவத் தலைவர்கள், R.ஸ்ரீனிவாசன், செயலாளர்)*

**மேலும் ஒர் சாதனை**: உணவகங்களில் வழங்கப்படும் உணவின் மீது GST வரி 5 சத வீதமாகக் குறைக்கப்பட்டாலும், வெளி இடங்களில் உணவு வழங்கும் சேவைக்கு (Outdoor Catering Service) 18 சதவீத

வரி நீடித்தது. இதனையும் 5 சதவீதமாகக் குறைக்கவேண்டும் எனும் கோரிக்கையுடன் நம் சங்கம் மீண்டும் முயற்சிகளில் ஈடுபட்டது. வெற்றியும் கிடைத்தது. 1-10-2019 தேதி முதல் Outdoor catering Service மீதான வரி 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றது (அகில இந்திய அளவில்) நம் தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கம் மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.
*(நன்றி: R.ஸ்ரீனிவாசன், செயலாளர்)*

G.S.T.வரிச் சீர்திருத்த நடவடிக்கை
நம் சங்கத்தின் முயற்சிகள் தொடர்கின்றன
17-9-2021 தேதியன்று நடைபெற்ற G.S.T.Council கூட்டத்தில், வரி விகிதங்களை மாற்றுவது குறித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. G.S.T. வரி வருவாய் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. பல இனங்களில் வரி விகிதங்கள் குறைக்கப்பட்டதனால் வருவாய் குறைந்துவிட்டது. ஆதலால், விரிவாக ஆய்வு செய்து, வரி உயர்வு மற்றும் மாற்றங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்குவதற்காக, கர்நாடக மாநில முதல் அமைச்சர் தலைமையில், பல்வேறு மாநில அமைச்சர்களை உறுப்பினர்களாக நியமித்து, ஒர் குழு அமைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அச்சு ஊடகங்களில் பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியாகின. 5 சதம் எனும் வரி விகிதமே நீக்கப்பட்டுவிடும் என்பதும் அவ்வாறு வெளியிடப்பட்ட கருத்துக்களில் ஒன்று.

நம் சங்கம் உடனடியாக முயற்சிகளைத் துவக்கியது. 24-12-2021 தேதியன்று மத்திய நிதி அமைச்சரைச் சந்தித்து விரிவான கோரிக்கை மனு அளித்தோம். சாதாரண உணவகங்கள் மீதான G.S.T வரி 5 சத வீதத்திலேயே நீடிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி தக்க ஆதாரங்களுடன் விளக்கமாக நம் மனுவில் கூறினோம். நம் மாநில நிதி அமைச்சர், வணிக வரித் துறை அமைச்சர், வணிக வரித்துறை ஆணையர் ஆகியோரிடமும் மனுக்கள் அளித்தோம். டெல்லி சென்று, மத்திய நிதித் துறைச் செயலாளர், வருவாய்த்துறைச் செயலாளர் மற்றும் T.R.U. இயக்குநர் ஆகியோரையும் சந்தித்து மனுக்கள் அளித்தோம்.

வரிச் சீர்திருத்தக்குழுத் தலைவரும், கர்நாடக மாநில முதல்வருமான திரு S.பொம்மை, உறுப்பினர்கள். பீகார் மாநிலத் துணை முதல்வர், கோவா மாநில் சட்டமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர், கேரள மாநில நிதி அமைச்சர், ராஜஸ்தான் மாநில நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், உத்தரப் பிரதேச மாநில நிதி அமைச்சர் மற்றும் மேற்கு வங்க மாநில நிதி அமைச்சர் ஆகியோருக்கும் மனுக்கள் அளித்தோம். *(நன்றி: M.வெங்கடசுப்பு, தலைவர், M.ரவி மற்றும் K.T.ஸ்ரீநிவாசராஜா, கௌரவத் தலைவர்கள், R.ஸ்ரீனிவாசன், செயலாளர்)*

## உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் (Processed Foods) தரத்தைச் சர்வதேசத் தரத்திற்கேற்ப உயர்த்தும் முயற்சிகள் 2002-ம் ஆண்டில் மத்திய அரசினால் துவக்கப்பட்டன. பதப்படுத்தப்பட்ட உணவுகள் தர நிர்ணயச் சட்டம் ஒன்றினை உருவாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. உணவு கலப்படத் தடைச் சட்டம், பால் மற்றும் பால் பொருட்களுக்கான சட்டம், இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களுக்கான சட்டம் போன்று உணவு பாதுகாப்பு தொடர்பான பதினோறு சட்டங்கள் தமது துறையின் கீழ் செயல்படுத்தப்படுவதனால், புதிய சட்டமும் **சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை**யின் கீழ்தான் கொண்டு வரப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. **பதப்படுத்தப்பட்ட உணவுகள் துறை** மற்றும் **சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை** என மத்திய அரசின் இரு துறைகளுக்கிடையிலான கருத்து வேறுபாடு காரணமாக புதிய சட்டத்தை உருவாக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டது. பல்வேறு நிலை ஆலோசனைகளைத் தொடர்ந்து, பிரதமரின் தலையீட்டின் பேரில், ஒர் முடிவு எட்டப்பட்டது. உணவு பாதுகாப்பு தொடர்பாக அமுலில் உள்ள அனைத்து சட்டங்களுடன், புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் தர நிர்ணயச் சட்டத்தையும் உள்ளடக்கி ஒரே சட்டமாக உருவாக்குவதெனவும், அந்தப் புதிய சட்டம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையின் நிர்வாக வரம்பில் செயல்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சட்டத்தை உருவாக்கும் பொறுப்பை எற்றுக்கொண்ட **சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை**யின் அடுத்த நகர்வுதான், நம் நாட்டில் உணவகங்கள் மட்டுமின்றி, உணவு மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து வகையான சேவை, வணிகம் மற்றும் தொழில்களையும் பெரும் பிரச்னைகளுக்கும், சிரமங்களுக்கும் உட்படுத்தியது. புதிய ஒருங்கிணைந்த சட்டத்தை உருவாக்கும் பொறுப்பு *“அவுட் சோர்சிங்”* (Out Sourcing) முறையில், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (Federation of Indian Chambers of Commerce and Industries) வசம் ஒப்படைக்கப்பட்டது. அந்த சங்கம், வழக்கறிஞர்கள் கம்பெனி ஒன்றைப் பணியில் அமர்த்தி, சட்டத்தின் முன் வடிவைத் தயாரித்து அளித்தது. நம் நாட்டில் நிலவிய

யதார்த்தமான, நிதர்சனமான நிலைகள் எதனையும் அந்த வழக்கறிஞர்கள் குழு கவனத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. வளர்ந்த நாடுகளின் சட்டங்களிலிருந்து வெட்டுதல் மற்றும் ஒட்டுதல் (Cutting and pasting) பணிகள்தான் நடைபெற்றது என யூகிக்கவேண்டியுள்ளது. மத்திய அரசின் சுகாதாரத் துறை அலுவலகத்தில், அரசு அதிகாரிகளால் இந்த சட்டம் உருவாக்கப்பட்டிருந்தால், இந்த சட்டம் நடைமுறை சாத்தியமானதாக அமைந்திருக்கும்.

Had the drating of the Act been done at the Central Secretariat, the Department of Health would have definitely collected valuable inputs and intelligence from the Departments of Food, Agriculture, Water Resources, Public Health, Local Administration, Chemicals and Fertilisers etc. Several complications and inter-sectional contradictions in the Act would have been avoided. விளை நிலங்களில் கொட்டப்படும் அளவற்ற ரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு நடவடிக்கையாக விளையும் பயிர்கள், காய்கனிகள், கீரை வகைகள், பழ மரங்கள் மீது தெளிக்கப்படும் ஆபத்தான பூச்சிக் கொல்லி மருந்துகள் பற்றியெல்லாம் அந்த சட்டம் கண்டு கொள்ளவில்லை. வேளாண் விளைபொருட்களில், எண்பது சத வீதத்திற்கும் அதிகமானவைகளில், ரசாயன உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் ஆபத்தான கேடு விளைவிக்கும் நச்சுக்கள் உள்ளன என்பதையும் அந்த சட்டம் கவனத்தில் கொள்ளவில்லை. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஆபத்து விளைவிக்கும் தரக்குறைவுகள் கண்டுபிடிக்கப்பட்டாலும், பயன் எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. ஏனெனில், வேளாண் உற்பத்தித் தொழிலுக்கு, அந்த சட்டத்தில் முழுமையான விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

Food Safety and Standards Act, 2011

Food safety is a must for ensuring the health and happiness of the people of our country. The laudable objects of the Act have been self defeated by several intersectional contradictions in the Act. Several State Governments urged the Government of India to revisit the Act, Rules and Regulations. Many provisions of the Act are against small time FBOs of our country. The Act would benefit global food companies at the cost of common people and small business people.

## Standards

The Standards fixed in the erstwhile Prevention of Food Adulteration Act, 1954 have been adopted in toto in the 2006 Act. The law makers have failed to recognize the fact that primary food articles and horticultural products grown in our country have deteriorated in quality due to indiscriminate use of chemical fertilizers and pesticides during the past 60 years in the name of green revolution. Primary food articles pertaining to the standards prescribed in the Act are no more available in our country. If these standards are strictly enforced, about sixty percent of the primary food articles, vegetables and fruits produced in our country cannot be allowed to be marketed.

## Inter Sectional Contradictions

The Hon'ble Supreme Court of India has given a direction to the Food Safety and Standards Authority of India (W.P.(Civil) No.681 of 2004 date October 22, 2013) to conduct periodical inspections and monitoring of major fruits and vegetable markets, so as to ascertain whether they conform to such standards set by the Act and the Rules. The Supreme Court has also observed that it is of utmost importance that the provisions of the Act are properly and effectively implemented so that the Act can achieve an appropriate level of human life and health, safeguarding the right to life guaranteed under Article 21 of the Constitution of India.

Even if raids are conducted based on section 21 of the Act and directions of the Hon'ble Supreme Court, no further proceedings are possible as subsection 3 of section 18 and subsection (2)(b) of section 48 of the Act pre-empt any action against the source of such contamination.

## Self Regulation

The Act provides for self regulation and self declaration. But stringent penalty clauses defeat this concept. Exorbitant penalties and self regulation do not travel together.

Inter Departmental Involvement

Food service providers and trade are not against food safety or standards. But, food safety cannot be achieved by exuberant penalties and fines. Much of the discourse on preconditions for the food service providers are to do with the civic amenities. Local government bodies have miserable track records of performance and food service providers should not be made a victim. It is an accepted fact that almost all primary food articles including vegetables, fruits and greens available in the market contain pesticide residues. The five departments of Chemicals & Fertilizers, Agriculture, Water Resources, Public Health and Local Administration should be involved with specific responsibilities in implementing the Act. Economics should never be a constraint in assuring food safety to the citizens of any nation. But impracticality of an enforceable law can be a thorn in the flesh of both the enforcement and operators.

எண்ணற்ற குறைகள் இருந்தாலும், 2011-ம் ஆண்டில் சட்டம் அமுலாக்கப்பட்டு விட்டது. அந்த சட்டத்தின் தண்டணை விதிகள் (Penalty Clauses) மிகக் கொடுமையானவை. பெரும் தொழிற்சாலைகளில், பல லட்சம் டன் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் உடனடி உண்ணும் (Processed Food and Instant Food) உணவு வகைகளைத் தயார் செய்து, விரிவான விளம்பர உத்திகளுடன், நாடு முழுவதும் விற்பனை செய்யும் தொழிலதிபர்களையும், நகரத்தின் ஒரு சிறிய பகுதியில், சட்டதின் தர நிர்ணய விதிகளுக்கு உட்படுத்தப்படாத, உணவு வகைகளைத் தயார் செய்து, வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சிறிய உணவகங்களையும் இவ்விதிகள் ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்கிறது. உணவகத் தொழிலையும், அதில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான நம் உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டுமே! நம் சங்கம் தொடர் முயற்சிகள் மேற்கொண்டது. ஆக்கபூர்வமான பணிகளை 2011-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் துவக்கினோம்.

பயிற்சிப் பட்டறைகள்

சென்னை, கோயம்பத்தூர், வேலூர், திருச்சி, மதுரை, ஈரோடு, கரூர், உதகமண்டலம் மற்றும் கோபிச்செட்டிபாளையம் ஆகிய நகரங்களில் பயிற்சிப் பட்டறைகள்

நடத்தப்பட்டன. நம் சங்கத்தின் உணவியல் ஆலோசகர் டாக்டர் V.பசுபதி அவர்கள் பயிற்சி வகுப்புகளைச் சிறப்பாக நடத்தினார். முன்னர் அமுலில் இருந்த உணவு கலப்படத் தடைச் சட்டம் உணவுப் பொருட்களில் காணப்பட்ட கலப்படங்கள் பற்றி மட்டுமே பேசியது. ஆனால், புதிய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், உணவு தயாரித்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பான வழிமுறைகளைப் பற்றி விரிவாக விளக்குகின்றது. வழிகாட்டு நெறிமுறைகளை முறையாகப் பின்பற்றும் உணவகங்கள் ***"நாங்கள் உண்வு தயாரிபில் பாதுகாப்பான வழிமுறைகளைப் பின்பற்றுகிறோம். ஆரோக்யமான உணவு வகைகளை வழங்குகின்றோம்."*** எனும் சுய அறிவிப்பை வெளியிடுவதற்கும் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. Self Regulation and self Declaration on the preparation and service of safe and healthy Food is a positive and welcome development in the Act.

ஆங்கிலம், இந்தி உட்பட உலகின் 52 மொழிகளில் Food Safety and Standards Act, 2006 வெளியிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், தமிழ் மொழியில் வெளியிடப்படவில்லை. நம் உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில், சட்டத்தின் முக்கியமான சாராம்சங்களைத் தொகுத்து,

*"உணவகத் தொழிலுக்கு ஓர் எளிய வழிகாட்டி"*

எனும் கையேட்டினை, 2011-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நம் சங்கம் தயாரித்து உறுப்பினர்களுக்கு வழங்கியது.

எளிய, சுலபமான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சட்டத்தின் உயரிய நோக்கங்கள் அனைத்தையும் நம் உறுப்பினர்கள் தம் உணவகங்களில் நிறைவேற்றலாம் என்பதனைத் தெளிவுபடுத்தும் வண்ணம்.

*"பாதுகாப்பான உணவு*
*ஆரோக்யமான உணவு"*

எனும் வழிகாட்டி இதழை நம் சங்கம், 2016-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் வெளியிட்டது. இவ்விரு கையேடுகளும் உறுப்பினர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றன.

## Exemptions

Our association submitted several representations in person to the FSSAI Authorities and obtained exemptions from various rules for the benefit of the restaurant industry.

| | |
|---|---|
| 1) Licensing and Regulation (2-1-9) | Any modification or change in the product category to be conveyed to the licensing authority |
| 2) Licensing and Regulation | Return to be filed in form D1 with the licensing authority in respect of each food product handled by it. |
| 3) Annexure II Sl.No.18 | N.O.C. from the State Pollution Control Board and the Local Body |
| 4) Annexure III Sl.No.4 | Employ atleast one qualified person (degree holder) to supervise the production process. |
| 5) Annexure III Sl.No.6 | Ensure that no product other than the goods indicated in the license/registration is produced in the unit. |
| 6) Annexure iii) Sl.No.8 | Maintain daily records of production, raw materials and sales separately. |
| 7) Annexure iii) Sl.No.12 | Ensure testing of relevant chemical and / or microbiological contaminants in food products atleast once in six months through own lab or NABL/FSSAI notified laboratory. |
| 8) Penalty Clauses: Section 69 Power to Compound offences. | Facility to compound several licensing and similar offences since granted. |

## Food Safety supervisor Training FoSTaC

As per condition No.4 of the conditions of license, every food service provider should employ atlest one technical person to supervise the production process. The technical person shall possess atleast a degree in science with chemistry or any other equivalent qualification.

We submitted to the FSSAI that this condition would apply only to food manufacturing plants and factories. Not to Food Service Providers like Restaurants. Standalone restaurants prepare and serve ethnic food varieties of our country to their customers. The recipe and method of preparation vary between establishments. No common recipe or methodology. Restaurant owners and the chefs employed by them keep this information as a trade secret. A food safety supervisor holding a degree qualification cannot be an effective safety supervisor in this scenario. We prayed that Restaurants should be exempted from this stipulation. FSSAI is recommending an one day/ two days course for ensuring food safety. We requested that the syllabus defined by stake holders associations be accepted as authorised for such training courses. FSSAI agreed to our submission . The syllabus for the training program for restaurant employees, prepared and submitted by our association, was approved. FoSTaC Training program was inaugurated. The Tamilnadu Hotels Association as training partner and Dr.V.Pasupathi as knowledge partner joined hands and trained thousands of our employees and owners as duly certified Food Safety Supervisors.

## நிறைவாக

வாடிக்கையாளர்கள் மனம் மகிழும் வண்ணம் சுவையான, ஆரோக்யமான உணவு வழங்கும் விருந்தோம்பல் சேவை தொடர் மாறுதல்களும், வளர்ச்சியும் காண்பது காலத்தின் கட்டாயம். மக்களின் ரசனைக்கேற்ப மாற்றங்கள் தொடரும். இத்தகைய மாற்றங்கள் மக்களின் ஆரோக்யத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதுதான் சட்டத்தின் நோக்கம்.

விருது :: Award:

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் நம் உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தில், உணவகத் தொழிலில் பாதிப்புகளை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் நம் சங்கம் 2006-ம் ஆண்டிலிருந்தே கவனம் செலுத்தியது. பல்வேறு ஆக்கபூர்வமான கருத்துரைகளும் கோரிக்கை மனுக்களும் ஆணையத்திற்கும், மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைக்கும் அனுப்பப்பட்டன என்பதனை நம் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அதற்கான "**விருது**" நம் சங்கத்திற்கு 2016-ம் ஆண்டில் கிடைத்தது. **உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தின்** 10 ஆண்டுகள் நிறைவு விழா 2016-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் டெல்லியில் கொண்டாடப்பட்டது. மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் தலைமை வகித்தார். தனிப்பட்ட அழைப்பின்பேரில் டாக்டர் பசுபதி அவர்களும், நம் சங்கத்தின் செயலாளர் ஸ்ரீனிவாசன் அவர்களும் கலந்துகொண்டனர். விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சி. விழா அரங்கில் நம் மாநில உணவு பாதுகாப்பு ஆணையர் திருமதி P.அமுதா, I.A.S.உள்பட அனைத்து மாநில உணவு பாதுகாப்பு ஆணையர்கள், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை உயர் அதிகாரிகள், உணவு பாதுகாப்பு ஆணைய அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் குழுமியிருந்தனர்.

உணவு பாதுகாப்பு ஆணைய C.E.O **திரு பவன்குமார் அகர்வால், I.A.S.** அவர்கள் மகிழ்ச்சி பொங்கும் குரலில் ஒர் அறிவிப்பை வெளியிட்டார்.

> "Of all the State Hotels Assiociations in our country, we have Invited only the Tamil Nadu Hotels Association and its Secretary Mr. Srinivasan to this function. His representations all along have been positive and purposeful".

> “நம் நாட்டில் அனைத்து மாநிலங்களிலும் ஒட்டல் சங்கங்கள் செயல்படுகின்றன. ஆனால், தமிழ்நாடு ஒட்டல்கள் சங்கத்தையும், அதன் செயலாளர் Mr. ஸ்ரீனிவாசன் அவர்களையும் மட்டுமே நாம் இந்த விழாவிற்கு அழைத்துள்ளோம். அவருடைய கோரிக்கை மனுக்கள் அனைத்துமே ஆக்கபூர்வமானவையாகவும், பயன் மிகுந்தவைகளாகவும் உள்ளன.”

***இதனிலும் பெரிய விருதை நம் சங்கத்திற்கு நாம் எதிர்பார்க்கமுடியுமா?***

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தை எதிர்கொள்வதில், நாம் துவக்கம் முதலே டாக்டர் பசுபதி அவர்களோடு இணைந்து பணியாற்றினோம். நம் சங்கம் மேற்கொண்ட தொடர் முயற்சிகளால், அகில இந்திய அளவில் உணவகத் தொழில் பெரும் பயன் பெற்றது. நம் மாநிலத்தில் மட்டுமின்றி, அனைத்து மாநிலங்களிலும் உணவு பாதுகாப்பு மேலாளர் பயிற்சி வகுப்புகளை டாக்டர் நடத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் பசுபதி அவர்களுக்கும், பரீக்ஷான் நிறுவனத்திற்கும் நம் இதயப்பூர்வமான நன்றி.

## தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

1948-ம் ஆண்டிற்கு முன்பாக, நம் மாநிலத்தில் உணவகங்களுக்கு உரிமங்கள் வழங்குவதற்கான தனியான சட்டம் எதுவும் இல்லை. 1948-ம் ஆண்டில் இந்திய தொழிற்சாலைகள் சட்டம் (அகில இந்திய சட்டம்) உருவாக்கப்பட்டது. நாடு முழுவதும் உணவகங்கள் அந்த சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. ஆனால், உணவகங்களுக்கு உரிமம் வழங்குவதற்கு இந்திய தொழிற்சாலைகள் சட்டம் ஏற்புடையதல்ல என தமிழ்நாடு அரசு கருதியது. மாநில அரசின் பரிந்துரையின் பேரில், உணவகங்கள் அந்த சட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டன.அடுத்து, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் உணவகங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் இந்த சட்டமும் உணவகங்களுக்கு உரிமம் வழங்குவதற்கு ஏற்புடையதல்ல என மாநில அரசு கருதியது.

1953-ம் ஆண்டில் நம் சங்க நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் அரசு அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, கருத்துக்களைக் கேட்டறிந்தனர். உணவகங்களுக்கெனத் தனியாக ஒர் சட்டம் உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. 1958-ம் ஆண்டில், தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் (The Tamil Nadu Catering Establishments Act) அமுலாக்கப்பட்டது. உணவகங்கள் இரவு பகல் 24 மணி நேரமும் சேவைகள் வழங்குவதற்கு இந்த சட்டம் அனுமதியளிக்கின்றது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டும். நம் நாட்டில் உள்ள 28 மாநிலங்களில், குறிப்பிட்ட ஒரு சில மாநிலங்களில் மட்டுமே உணவகங்களுக்கென தனியாக ஒரு சட்டம் உள்ளது. இதர மாநிலங்களில் கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் அதிகார வரம்பில்தான் உணவகங்கள் உள்ளன.

அடக்குமுறைச் சட்டம் : காலனி ஆதிக்க காலத்தில், 1888-ம் ஆண்டில், சென்னை நகர காவல் சட்டம் உருவாக்கப்பட்டது. காவல் துறையின் பணிகள், அதிகார வரம்புகள், மக்களுக்கு உள்ள உரிமைகள் ஆகியவைகளைத் தெளிவுபடுத்துவதே இந்தச் சட்டத்தின் நோக்கம். ஆனால், சென்னை நகரில் உணவகங்கள், ஒட்டல்கள் மற்றும் தேநீர்க்கடைகள் நடத்துவதற்கு மாநகரக் காவல் ஆணையரிடம் உரிமம் பெறவேண்டும் என இந்த சட்டத்தின் ஒர் விதி கூறியது. இது பற்றித் தனியாக ஒர் விரிவுரை எழுதியுள்ளோம்.

உணவகங்களின் வணிக நேரம்

கீழ் நிலை காவல் அதிகாரிகளால் தொடர் பிரச்னைகள்

உணவகங்கள் இரவு பகல் 24மணி நேரமும் சேவைகள் வழங்குவதற்கு, தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் அனுமதியளிக்கின்றது. உணவகங்கள் மட்டுமின்றி, கடைகள், வணிக நிறுவனங்கள் என அனைத்துவகையான நிறுவனங்களின் வணிக நேரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தொழிலாளர் நலத் துறைக்கு மட்டுமே உள்ளது. காவல் துறைக்கு அதிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை. 2015-ம் ஆண்டில், மத்திய அரசு முன் மாதிரி கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் ஒன்றை (Model Shops and Establishments (Regulation of Employment and Conditions of Service) Act 2015) உருவாக்கி அனைத்து மாநில அரசுகளுக்கும் அனுப்பியது. உணவகங்கள், கடைகள், மால்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் அனைத்தும் நம் நாட்டில் 24 X 7 செயல்பட இந்த சட்டம் அனுமதியளிக்கின்றது. இதனைப் பின்பற்றி நமது மாநில அரசும், அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. ஆனாலும், காவல் துறையினரின் துன்புறுத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தன. இரவு 10-30 / 11-00 மணிக்கு உணவகங்களை முடிவிடவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

உணவகங்களுக்குள் புகுந்து, ஊழியர்களை மிரட்டுவது, காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வது எனப் பலவிதமான இடையூறுகள். அரசு ஆணைகள, நீதிமன்றத் தீர்ப்புகள் எதுவுமே தங்களைக் கட்டுப்படுத்தாது எனும் கருத்தில் கீழ்நிலை காவல் அதிகாரிகள் செயல்பட்டனர்.

நம் சங்கத்தின் சார்பில், தலைவர் M.வெங்கடசுப்பு, கௌரவத் தலைவர் D.ஸ்ரீனிவாசன் மற்றும் செயலாளர் R.ஸ்ரீனிவாசன் ஆகியோர் மாநில காவல் துறை இயக்குநர் Dr.C.Sylendra Babu, I.P.S. அவர்களை 21-6-2022 தேதியன்று சந்தித்து, விரிவான கோரிக்கை மனு அளித்தோம். அரசு ஆணைகள், மாண்புமிகு சென்னை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு ஆகியவைகளின் நகல்களும் மனுவுடன் இணைக்கப்பட்டன. காவல் துறை இயக்குநர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். இரவு நேரத்தில் இயங்கும் உணவகங்கள், கடைகளை மூடுமாறு வற்புறுத்தக்கூடாது என மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாநகரக் காவல் ஆணையர்கள் அனைவருக்கும் உரிய உத்தரவுகள் பிறப்பித்தார்.

Prior to the year 2007,
Eating Houses, Boarding Houses and Lodging Houses had to obtain two licences every year in Corporation Cities.

One from the Municipal Corporation.

Another from the Police Commissioner of the respective city under section 35 of the Chennai City Police Act, 1888.

This dual licensing system created many problems. Particularly, the Police licence.

Leave alone a new licence, even renewals were problematic.

Thiru R.Srinivasan in his capacity as the President of The Madurai District Hotels Association initiated efforts in the year 1994 to do away with the Police Licence system.

First representation was submitted to the Govt, of Tamil Nadu in the year 1994.

He pursued the mission for thirteen long years. Even after becoming the Secretary of the Tami Nadu Hotels Association. Reward came in the year 2007.

Government of Tamil Nadu issued orders in G.O. Ms.No. 1304, Home (Police – VIII) Department dated 8-9-2007 to the effect that grant of licence for running eating houses, Boarding and Lodging houses by Police Department under section 35 of the Chennai City Police Act, 1888, be done away with.